S. பிச்சையா ஆச்சாரி சன்ஸ்-ன்
ஸ்ரீ முருகன் ஜீவல்லரி மார்ட் A/C
தங்கம் ★ வெள்ளி ★ வைரம்
9443081168 8438442557 9994638971
நகை சேமிப்பிற்கு செய்கூலி, சேதாரம் கிடையாது.
Sri Murugan Jewellery Mart
உரிமையாளர்கள்
P.மணிகண்டன் B.Com., 78452 54592
P.பட்டு சங்கர் B.E., 99946 38971
41, மெயின் ரோடு, சங்கரன்கோவில்.
98945 71069

சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"

SPARES
2 WHEELER
SDK spare parts
HERO HONDA, TVS, BAJAJ, ROYAL ENFIELD, KTM, YAMAHA
ஒரிஜினல் ஸ்பேர்ஸ் கிடைக்கும்
No.3, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன் காம்ப்ளக்ஸ், சங்கரன்கோவில்
7540002331 / 9865147105

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 363 25.06.2026 THURSDAY AANI : 11 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 363 25.06.2026 வியாழக்கிழமை ஆனி : 11 விலை : ரூ.5/–

## தனியார் பள்ளி கல்வி கட்டண வழக்கு தேதி குறிப்பிடாமல்

# "தீர்ப்பு ஒத்திவைப்பு"

சென்னை: ஜூன்.25-

தனியார் பள்ளிகள் கல்வி கட்டணத்தை பள்ளிகளின் அறிவிப்பு பலகைகளில் வெளியிட பிறப்பித்த உத்தரவை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் தேதி குறிப்பிடாமல் தீர்ப்பை சென்னை உயர்நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள மெட்ரிகுலேஷன், சிபிஎஸ்இ என அனைத்து தனியார் பள்ளிகளுக்கும் அரசு நிர்ணயித்துள்ள கல்விக் கட்டண விவரங்களை, பள்ளிகளின் விளம்பர பலகைகளில் வெளியிடுவதையும், மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பப் படிவத்திலும் அச்சிட்டு வெளியிடவதையும் கட்டாயமாக்கும்படி தனியார் பள்ளிகள் இயக்குநருக்கு தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம் மே 25 ஆம் தேதி உத்தரவிட்டது.

அதன்படி, ஜூன் 5 ஆம் தேதிக்குள் கட்டண விவரங்களை விளம்பர பலகையில் வெளியிடும்படி, அனைத்து நர்சரி, பிரைமரி, மெட்ரிக், சிபிஎஸ்இ, பிற வாரிய பள்ளிகளுக்கு தனியார் பள்ளிகள் இயக்குநர் ஜூன் 1 ஆம் தேதி சுற்றறிக்கை அனுப்பினார்.



இதனைத் தொடர்ந்து, மாநில தகவல் ஆணைய உத்தரவையும், தனியார் பள்ளிகள் இயக்குநர் பிறப்பித்த சுற்றறிக்கையையும் ரத்து செய்யக் கோரி அகில இந்திய தனியார் கல்வி நிறுவனங்கள் சார்பில் அதன் பொதுச் செயலாளர் கே.பழனியப்பன் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி எம்.தண்டபாணி முன் இன்று விசாரணைக்கு வந்தது. மனுதாரர் தரப்பில், தகவல் உரிமைச் சட்டம், தனியார் கல்வி நிறுவனங்களுக்கு பொருந்தாது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. சிபிஎஸ்இ போன்ற மத்திய அரசின் பாடத் திட்டத்தின் கீழ் செயல்படும் பள்ளிகளை தமிழ்நாடு அரசு கட்டுப்படுத்த முடியாது என வாதிடப்பட்டது.

தமிழ்நாடு அரசுத் தரப்பில், தகவல் ஆணைய உத்தரவின் அடிப்படையில் கல்வி கட்டணத்தை வெளியிட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்த உத்தரவை எதிர்த்து தனிப்பட்ட பள்ளிகள் தான் வழக்கு தாக்கல் செய்ய முடியும். ஆனால், சங்கத்தின் சார்பில் வழக்கு தாக்கல் செய்ய முடியாது. விதிகளின்படி பள்ளிகள் கட்டண விவரங்களை வெளியிட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி தண்டபாணி, வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைத்தார்.

தனியார் பள்ளிகளின் கட்டண விவரத்தை பள்ளிகள் வெளியிட வேண்டும் என பிறப்பிக்கப்பட்ட உத்தரவு பெற்றோர்கள் மத்தியில் வரவேற்பை பெற்ற நிலையில், இந்த வழக்கில் நீதிமன்றத்தின் தீர்ப்பு குறித்த எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.



## த்ரிஷா படம் எங்கே? காரைக்குடி மாநகராட்சி கூட்டத்தில் கொந்தளித்த சுயேச்சை கவுன்சிலர்; அதிர்ந்த மாமன்றம்

சிவகங்கை: ஜூன்.25-

காரைக்குடி மாநகராட்சிக் கூட்டத்தில் சுயேச்சை கவுன்சிலர் ஒருவர் நடிகை த்ரிஷாவின் படத்தை வைக்கக் கோரிய சம்பவத்தால் கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

காரைக்குடி மாநகராட்சியின் சாதாரணக் கூட்டம் இன்று பொறுப்பு மேயர் குணசேகரன் தலைமையில், ஆணையாளர் பாலு முன்னிலையில் தொடங்கியது. கூட்டம் தொடங்கிய உடனே மாநகராட்சியில் எந்தவொரு வார்டிலும் பணிகள் சரியாக நடைபெறவில்லை என்று கூறி திமுக, அதிமுக, காங்கிரஸ் கவுன்சிலர்கள் அவையின் மையப்பகுதிக்கு வந்து கூச்சலிட்டனர்.

அப்போது மாமன்ற கூட்ட அரங்கில் தற்போதைய முதலமைச்சர் விஜய்யின் படம் மட்டுமே வைக்கப்பட்டிருந்தது. இதைக் கண்ட அதிமுக கவுன்சிலர்கள் முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியின் படத்தையும், திமுக கவுன்சிலர்கள் முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் படத்தையும் வைக்க வேண்டும் என மாறி மாறி கோஷமிட்டனர்.

இதையடுத்து ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்து, வேறு வழியின்றி கூட்ட அரங்கில் முதலில் எடப்பாடி பழனிசாமியின் படமும், அதைத்தொடர்ந்து மு.க.ஸ்டாலின் மற்றும் மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா ஆகியோரின் படங்களும் வரிசையாக வைக்கப்பட்டன.

இதற்கிடையே, தங்களது வார்டு கோரிக்கைகள் மற்றும் மனுக்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனக் குற்றம் சாட்டி, அதிமுகவைச் சேர்ந்த 27 வது வார்டு கவுன்சிலர் பிரகாஷ், பொறுப்பு மேயரின் இருக்கை முன்பாக அமர்ந்து திடீர் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டதால் அவையில் பரபரப்பு கூடியது.

இந்த பரபரப்பான சூழலுக்கு நடுவே, அவையில் பங்கேற்ற சுயேச்சை மாமன்ற உறுப்பினர் மெய்யர் என்பவர் திடீரென எழுந்து, 'மாமன்ற கூட்ட அரங்கில் வருங்கால முதலமைச்சர் த்ரிஷாவின் படத்தை வைக்க வேண்டும்' என விநோத கோரிக்கையை முன்வைத்தார்.

தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட முக்கிய காரணமாக இருந்த நடிகை த்ரிஷாவின் புகைப்படத்தை வைக்காமல் இருப்பது ஏன்? என்றும் அங்கிருந்த அதிகாரிகளிடம் அவர் கேள்வி எழுப்பினார். அடுத்த முதல்வராக இருக்கும் அவரின் புகைப்படத்தை வைக்காமல் மற்ற தலைவர்களின் புகைப்படத்தை வைப்பதை ஏற்க முடியாது என்றும், த்ரிஷாவின் போட்டோ கண்டிப்பாக மாநகராட்சி கூட்ட அரங்கில் வைக்கப்பட வேண்டும் எனவும் தனது ஆதங்கத்தை கொட்டி தீர்த்தார் இந்த மூத்த சுயேச்சை கவுன்சிலர்.

தலைவர்கள் பட விவகாரத்தில் ஏற்கனவே சூடாக இருந்த அவையில், கவுன்சிலர் மெய்யரின் இந்த பிடிவாதமான கோரிக்கை அங்கிருந்தவர்கள் மத்தியில் சிரிப்பையும், அதே சமயம் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது.

## "திமுக ஆட்சியில் ஒரேயொரு வழக்கு போட்டிருந்தால் விஜய் அரசியலை விட்டே ஓடியிருப்பார்" ஆர்.எஸ்.பாரதி

சென்னை: ஜூன்.25-

"நாங்கள் ஆட்சியில் இருந்தபோது ஒரேயொரு வழக்கு போட்டிருந்தால், விஜய் அரசியலை விட்டே ஓடிப்போயிருப்பார். தவறான பிரச்சாரங்களை பிஞ்சு உள்ளங்களில் ஏற்படுத்தி, அதன் மூலம் ஆட்சிக்கு வந்த விஜய் இன்று ஆட்டம் போடுகிறார்," என திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி விமர்சித்துள்ளார்.



இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "திமுக மிசாவையே பார்த்த கட்சி. பல்வேறு அடக்குமுறைகளை கண்டுள்ளோம். இது போன்ற பூச்சாண்டிகளை விஜய் காட்டமுடியாது. திமுகவின் வரலாறை கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். நேற்று சட்டப்பேரவையில் ஆடியதைப் போல, இன்று ஆட முடியாது. மக்கள் கொதித்துப் போயுள்ளனர்.

திமுக ஆதரவாளரான ஜென் ஸீ இளைஞர் கனிஷ் தாக்கப்பட்ட விவகாரத்தில், இன்னும் 24 மணி நேரத்தில் தவெகவைச் சேர்ந்த குற்றவாளிகள் மீது எப்ஐஆர் போடப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால், சைதாப்பேட்டை காவல்நிலையம் முன்பு திமுக சார்பில் மிகப்பெரிய போராட்டத்தை நடத்துவோம். இது பெரியார் பூமி. தமிழக மக்கள் இந்த மாயாஜாலங்களுக்கு அடிபணிய மாட்டார்கள். நடந்தது நடந்துவிட்டது.

தமிழக முதல்வராக பதவியேற்ற விஜய், தமிழ்நாட்டில் நிகழும் சட்டஒழுங்கு பிரச்சினைகளில் அக்கறை காட்டாமல், விஜய் மீது விமர்சனம் வைப்பவர்களை, ஆட்சியின் குறைகளைச் சுட்டிக் காட்டுபவர்களை இந்த அரசு குறிவைக்கிறது.

பாலியல் குற்றங்கள், கொலை, கொள்ளை போன்ற சம்பவங்களுக்கு பதிலளிக்காமல், அதை விமர்சிக்கும் திமுக இளைஞரணியினர், ஜென் ஸீ தலைமுறையினர் மீது தவெக அரசு தாக்குதல் நடத்தியுள்ளது. இன்ஸ்டா, சமூக வலைதளங்கள் மூலம் இவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள் என்பதை மறந்துவிட்டனர்.

நாங்கள் ஆட்சியில் இருந்தபோது ஒரேயொரு வழக்கு போட்டிருந்தால், விஜய் அரசியலை விட்டே ஓடிப்போயிருப்பார். எங்களுக்கு மக்கள் நலனே பெரிதாக இருந்ததால், நாங்கள் அதை லேசாக விட்டுவிட்டதன் விளைவு, தவறான பிரச்சாரங்களை பிஞ்சு உள்ளங்களில் ஏற்படுத்தி, அதன் மூலம் ஆட்சிக்கு வந்த விஜய் இன்று ஆட்டம் போடுகிறார். அதிகாரம் இருக்கிறது என்ற காரணத்தினால், திமுகவைச் சேர்ந்த 2 இளைஞர்கள் மீது கடும் தாக்குதலை நடத்தியுள்ளனர். இதுகுறித்து புகார் அளித்தால், போலீஸ் எப்ஐஆர் கூட போட மறுக்கிறார்கள்." எனத் தெரிவித்தார்.

## "தவெக அரசின் போலி பிம்பம் இளைஞர்கள் மத்தியில் சுக்குநூறாக நொறுங்கி வருகிறது" உதயநிதி



சென்னை: ஜூன்.25-

"திமுக இளைஞர்கள் ஆளுங்கட்சியையும் அரசையும் எதிர்த்து பேசினால் காவல்துறையை அனுப்புவது, அதுவே, தாக்கியவர்கள் தவெகவினர் என்றால் வேடிக்கைப் பார்ப்பதுஞ் இது தான் மாற்றமா?" என எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "திமுகவின் #நிமீஸீஞ் இளைஞர்களை ஒருங்கிணைத்துக் கூட்டங்கள் நடத்தி வந்த அன்பானந்தன் அரியப்பனை, கிருஷ்ணகிரி ராயக்கோட்டையில் அவரது வீட்டுக்குள் நள்ளிரவில் அத்துமீறி நுழைந்து காவல்துறையினர் கைது செய்ய முயற்சி செய்ததை வன்மையாக கண்டிக்கிறேன்.

இதே போல சமீபத்தில், நிமீஸீ ஞ் கூட்டத்தில் பேசிய கனி என்பவர் மீது தவெக ரவுடிகள் சைதாப்பேட்டையில் கொலைவெறி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கனியை தாக்கிய குற்றவாளிகள் மீது இதுவரை எந்த வழக்கும் பதிவு செய்யாத காவல்துறை, சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்த கனியை மிரட்டி டிஸ்சார்ஜ் செய்ய வைத்தது.

திமுக இளைஞர்கள் ஆளுங்கட்சியையும் அரசையும் எதிர்த்து பேசினால் காவல்துறையை அனுப்புவது, அதுவே, தாக்கியவர்கள் தவெகவினர் என்றால் வேடிக்கைப் பார்ப்பதுஞ் இது தான் மாற்றமா?

நிர்வாகத்திறனற்ற சோஃபா மாடல் அரசின் போலி பிம்பம், இளைஞர்கள் மத்தியில் சுக்குநூறாக நொறுங்கி வருவதைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் இந்த ஆட்சியாளர்கள் அடக்குமுறையை கையில் எடுத்து இருக்கிறார்கள். திமுக இளைஞர்களை காவல் துறையை ஏவி அச்சுறுத்தலாம் என்று ஆளும் அரசு நினைத்தால், கழகம் அதனை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்காது என்று எச்சரிக்கிறேன்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## வாகனப் பதிவில் சிறப்பு எண் பெற கட்டணத்தை உயர்த்த முடிவு: வரைவு அறிக்கை வெளியிட்டது தமிழக அரசு

சென்னை: ஜூன்.25-

வாகனப் பதிவில் சிறப்பு எண் பெறுவதற்கான கட்டணத்தை உயர்த்த தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கான வரைவு அறிக்கையை வெளியிட்டுள்ளது.



புதிதாக வாகனம் வாங்குவோர் அதை அவர்களின் முகவரிக்கு உட்பட்ட வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும். புதிய வாகனங்களை பதிவு செய்யும்போது அந்த வட்டார போக்குவரத்து அலுவலகம் அந்த வாகனத்துக்கு என பதிவு எண் ஒன்றை வழங்கும்.

இந்த பதிவு நடைமுறையில் பதிவுக் கட்டணம் மற்றும் சேவைக் கட்டணம் வசூலிக்கப்படும். ஆனால் வாகனப் பதிவு எண்ணாக வட்டார போக்குவரத்து அலுவலகம் ஒதுக்கும் எண்ணே கிடைக்கும்.

வாகன உரிமையாளர்கள் தங்களுக்குப் பிடித்த எண் வேண்டும் என்றால் அதற்கான கூடுதல் கட்டணம் செலுத்தி 'பேன்சி எண்' என கூறப்படும் அந்த சிறப்பு எண்களை பெற்றுக்கொள்ளலாம்.

இந்த சிறப்பு பதிவு எண்களை பெறுவதற்கான கட்டணங்களை உயர்த்த தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான வரைவு அறிக்கை அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி அரசால் ஒதுக்கப்படும் முன்பதிவு, பதிவு எண்களுக்கு, தற்போதைய வரிசைகு, தற்போதைய வரிசை மற்றும் அடுத்த மூன்று வரிசைகளுக்கு, ரூ.40 ஆயிரம் கட்டணம் இருக்கும் நிலையில், வரைவு அறிக்கையில் ரூ.80 ஆயிரமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதேபோல 5 முதல் 8வது வரிசைக்கு ரூ.60 ஆயிரத்தில் இருந்து ரூ.1.20 லட்சம் என இரு மடங்கு உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 13 மற்றும் 14வது வரிசைக்கான சிறப்பு எண்களை பெற ரூ.8 லட்சம் வரை கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இருசக்கர மற்றும் மூன்று சக்கர வாகனங்களுக்கு, வாகனத்தின் மதிப்பை அடிப்படையாக வைத்து ரூ.2,000 முதல் ரூ.1 லட்சம் வரை கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ரூ.50 ஆயிரம் மதிப்புடைய வாகனத்துக்கு ரூ.2 ஆயிரமும், ரூ.30 லட்சம் மதிப்புடைய வாகனங்களுக்கு ரூ.1 லட்சமும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட கார் மற்றும் பிற வாகனங்களுக்கு ரூ.20 ஆயிரம் முதல் ரூ.1.50 லட்சம் வரை கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த வரைவு அறிக்கை குறித்த கருத்துகளை ஜூலை 3ம் தேதிக்குள் உள்துறை செயலாளருக்கு அனுப்ப வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



## கிராமிய அஞ்சல் அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம்!" கோவில்பட்டிக்கு வருகை தந்த முதன்மை அஞ்சல் துறை தலைவர்!

கோவில்பட்டி, ஜூன்.25-
தமிழ்நாடு முதன்மை அஞ்சல் துறை தலைவர் மரியம்மா தாமஸ், கோவில்பட்டி அஞ்சல் கோட்டத்தின் தலைமை யிடத்திற்கு அதிரடி வருகை தந்தார்.
அங்கு நடைபெற்ற நிகழ்வில், 100க்கும் மேற்பட்ட கிராமிய அஞ்சல் அலுவலர்களுடன் (கிராமின் டாக் சேவகர்கள்) அவர் தீர்க்கமாகக் கலந்துரையாடினார். இக்கூட்டத்தில், அஞ்சல் துறையில் புகுத்தப்பட்டு வரும் நவீன தொழில்நுட்பங்கள் குறித்தும், சாமானியப் பொதுமக்களுக்கு அஞ்சல் சேவைகளை இன்னும் தங்குதடையின்றிச் சிறப்பாக வழங்குவது குறித்தும் அறிவியல் பூர்வமாக விவாதிக்கப்பட்டது.
மேலும், வாடிக்கையாளர் சேவையில் ஒவ்வொரு அலுவலரின் முக்கியப் பங்கு மற்றும் கோவில்பட்டி கோட்டத்தின் பல்வேறு சாதனைகளை எடுத்துரைத்துப் பாராட்டிய முதன்மைத் தலைவர், சிறப்பாகச் சேவை செய்தவர்களுக்குப் பரிசுகளை வழங்கி ஊக்கப்படுத்தினார். இச்சந்திப்பு தங்களுக்குப் புது உத்வேகத்தைத் தந்துள்ளதாகக் கிராமிய அலுவலர்கள் நெகிழ்ச்சியோடு தெரிவித்தனர்.
|இந்நிகழ்வில் அஞ்சல் துறை தெற்கு மண்டல தலைவர் செய்யது ரஷீத், கோவில்பட்டி கோட்டக் கண்காணிப்பாளர் செ. சுரேஷ்குமார் உட்படப் பல உயர்மட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## 52 கிலோ கேக், வீரவேல் பரிசு. அலங்காநல்லூரில் முதல்வர் விஜய் பிறந்தநாள்

அலங்காநல்லூர், ஜூன்.25-
மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவரும், முதலமைச்சருமான ஜோசப் விஜய் அவர்களின் 52வது பிறந்தநாள் விழா, தவெக ஒன்றியச் செயலாளர் விஜய் ஹரிஷ் தலைமையில், பேரூர் செயலாளர் தளபதி ரஞ்சித் மற்றும் பேரூராட்சி முன்னாள் சேர்மன் கீதா பாலாஜி முன்னிலையில் அசாத்திய எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது.
வாடிவாசல் கேக் வெட்டுதல் - வீரவேல் பரிசு:விழாவில் சிறப்பு விருந்தினராகச் சட்டமன்ற உறுப்பினர் கருப்பையா கலந்துகொண்டார். இதையொட்டி, ஸ்ரீ முனியாண்டி கோவிலில் முதலமைச்சர் பெயரில் சிறப்புப் பூஜைகள் நடத்தப்பட்டு, அலங்காநல்லூர்



வாடிவாசல் பகுதியில் 52 கிலோ பிரம்மாண்ட கேக் வெட்டி பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. தொடர்ந்து, எம்எல்ஏ கருப்பையா அவர்களுக்கு முன்னாள் சேர்மன் கீதா பாலாஜி 'வீரவாள்' வழங்கி கௌரவித்தார்.ராசு ஆசாரி மண்டபம்: தூய்மைப் பணியாளர்களுக்குப் புத்தாடைகளும், பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளுடன் அன்னதானமும் வழங்கப்பட்டன. ஏற்பாடுகளை நிர்வாகிகள் விக்கி, பிரதீப் செய்திருந்தனர்.
11வது வார்டு: வார்டு செயலாளர் வைகை வசந்தன் ஏற்பாட்டில், ஒன்றியச் செயலாளர் ஹரிஷ் பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். சின்ன ஊர்சேரி: ஐ.எஸ்.ஏ குழந்தைகள் காப்பகத்தில் வடக்கு ஒன்றிய நிர்வாகி தனசேகரன் ஏற்பாட்டில் கேக் வெட்டப்பட்டு, குழந்தைகளுக்கு அசைவ உணவு அன்னதானமாக வழங்கப்பட்டது. கிராமங்கள் தோறும் அன்னதானம்: மணியஞ்சியில் முத்துக்குமார் ஏற்பாட்டிலும், ஆதனூரில் வீரணன் ஏற்பாட்டிலும், மறவபட்டியில் ராஜா ஏற்பாட்டிலும் பொதுமக்களுக்கு அசாத்திய அன்னதானம் வழங்கப்பட்டது. முடுவார்பட்டியில் கிளைத் தலைவர் விஜய் கருப்பு, செயலாளர் முத்துப்பாண்டி, பொருளாளர் விஜய் விவேக், பூமிநாதன் ஏற்பாட்டில் கோவிலில் சிறப்புப் பூஜை செய்யப்பட்டு அன்னதானம் வழங்கப்பட்டது.
வலசை கிராமத்தில் வார்டு செயலாளர் தங்கராஜ், சுரேஷ், மதன், திலகவதி ஏற்பாட்டிலும், பாறைப்பட்டியில் கிளைச் செயலாளர் ராஜேந்திரன், விமல், முருகன், ராமச்சந்திரன் முன்னிலையிலும் பள்ளி மாணவர்களுக்குக் கல்வி உபகரணங்கள் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டன.
இந்நிகழ்வுகளில் மாநில வழக்கறிஞர் பிரிவு தியாகு, வாடிப்பட்டி ஒன்றியச் செயலாளர் தாமு, இணைச் செயலாளர் ராமநாதன், ஆர்த்தி வெங்கடேசன், வெள்ளை கங்கை, ரவி உள்ளிட்ட தவெக முக்கிய நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.




■ ஈரோடு மாவட்டம், தந்தை பெரியார் அரசு தலைமை பொது மருத்துவமனை ரவுண்டானா பகுதியில் போதைப்பொருள் தடுப்பு குறித்த விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.கந்தசாமி இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து (24.06.2026) துவக்கி வைத்தார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் செல்வி ஞி.கூஷி.கிரண் ஸ்ருதி இ.கா.ப., முதன்மை கல்வி அலுவலர் முனைவர். மான்விழி உட்பட பலர் உள்ளனர்.

## வேளச்சேரி சாலைக்கு 'மேஜர் முகுந்த் வரதராஜன்' பெயர் முதல்வர் விஜய் உத்தரவு

சென்னை, ஜூன்.25-
மேஜர் முகுந்த் வரதராஜனின் தியாகத்தை போற்றும் வகையில் தாம்பரம் ரயில் நிலையத்தில் இருந்து வேளச்சேரி வரையிலான சாலைக்கு 'மேஜர் முகுந்த் வரதராஜன் சாலை' என பெயர் சூட்டி முதல்வர் விஜய் உத்தரவு பிறப்பித்துள்ளார்.
இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: இந்திய ராணுவத்தில் திறம்படப் பணியாற்றி, பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளின்போது வீரமரணம் அடைந்தவரும், மரணத்திற்குப் பிறகு, இந்திய அரசின் அமைதிக்கால உயரிய விருதான அசோக் சக்ரா விருது பெற்றவருமான மேஜர் முகுந்த் வரதராஜன் தியாகத்தைப் போற்றுகின்ற வகையில், தாம்பரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தாம்பரம் ரயில் நிலையத்திலிருந்து வேளச்சேரி வரையிலான



சாலைக்கு "மேஜர் முகுந்த் வரதராஜன் சாலை" எனப் பெயர் சூட்டிட வேண்டும் என முதல்வர் விஜய்யை, இந்திய ராணுவத்தின் தென்னிந்திய பகுதிகளுக்கான தளபதி லெப்டினண்ட் ஜெனரல் MgýK நேரில் சந்தித்து கோரிக்கை வைத்தார்.
இந்தக் கோரிக்கையினைக் கனிவுடன் பரிசீலித்த முதல்வர், இக்கோரிக்கையின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார். அதனடிப்படையில், தாம்பரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தாம்பரம் ரயில் நிலையத்திலிருந்து வேளச்சேரி வரையிலான சாலைக்கு, இந்தியத் திருநாட்டிற்காகப் போராடி உயிர்நீத்த வீரரின் மாபெரும் தியாகத்தைப் போற்றுகின்ற வகையில், தமிழில் "மேஜர் முகுந்த் வரதராஜன் சாலை" எனவும், ஆங்கிலத்தில் "MAJOR MUKUND VARADARAJAN SALAI" எனவும் பெயர் சூட்டுவதற்கான அரசாணை 23.06.2026 அன்று வெளியிடப்பட்டுள்ளது.மேஜர் முகுந்த் வரதராஜன், தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட அனந்தபுரத்தைச் சேர்ந்தவர் ஆவார். இவர் தாம்பரத்தில் உள்ள சென்னை கிறித்துவக் கல்லூரியில் பட்டப்படிப்பினை நிறைவுசெய்து பின்னர் ராணுவத்தில் பணிபுரிந்து திறம்படப் பணியாற்றி, பணியின்போது வீர மரணம் அடைந்ததால் இவர் "தாம்பரம் மண்ணின் மைந்தர்" எனப் போற்றப்பட்டு வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



## போக்குவரத்துக் கழகங்களில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப ஏஐடியுசி வலியுறுத்தல்

சென்னை, ஜூன்.25-
ஏஐடியுசி பொதுச் செயலாளர் ஆறுமுகம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழக அரசால் வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கையில், போக்குவரத்து துறையின் மொத்த வருவாய் இழப்பு ரூ.72,667 கோடி எனவும், ஒரு கி.மீட்டர் பேருந்து இயக்கத்துக்கு வருவாய் ரூ.25.97, செலவு ரூ.78.81, பற்றாக்குறை ரூ.52.84 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
கடந்த 8 ஆண்டுகளாக பேருந்து கட்டணங்களில் எந்த உயர்வும் செய்யப்படவில்லை. சமூக சேவை நோக்கில் பேருந்து கட்டண நிலை பராமரிக்கப்பட்டு வருகிறது.
அரசு போக்குவரத்துக் கழகங்கள், முக்கிய நகரங்கள், மலைப் பகுதிகள், கடை கோடி கிராமங்கள், புதிய குடியிருப்பு பகுதிகள் உள்ளிட்ட இடங்களில் லாப நோக்கமின்றி பேருந்து சேவைகளை பொதுமக்களுக்கு வழங்கி வருகின்றன.
அரசு போக்குவரத்து என்பது மக்களுக்கு சேவையாற்றும் துறை ஆகும். எனவே, இதனை முழுமையாக லாப நஷ்ட கணக்கின் அடிப்படையில் மட்டும் மதிப்பிட முடியாது. இதனை ஒரு சமூக கடமையாக கருத வேண்டும். மேலும், உரிய அனுமதியின்றி சட்டவிரோதமாக இயக்கப்படும் ஆம்னி, மேக்சி கேப், உரிமம் மீறி இயங்கும் மினி பேருந்துகள் போன்ற வாகனங்களால் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு பெரும் வருவாய் இழப்பு ஏற்படுகிறது. அவை கடுமையாக கட்டுப்படுத்தப்பட வேண்டும்.
பணியாளர் பற்றாக்குறை காரணமாக பேருந்துகள் முழுமையாக இயக்கப் படவில்லை. பேருந்து இயக்குவதற்கு தேவையான ஓட்டுனர், நடத்துனர், தொழில்நுட்பம் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் காலி பணியிடங்கள் நிரப்ப வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## "கத்தார் விபத்தில் பலியான நெல்லை இளைஞர்கள்...முதல்வர் அறிவித்த ரூ.10 லட்சம் நிவாரணக் காசோலைகளை வழங்கிய எம்எல்ஏ!

ராதாபுரம், ஜூன்.25-
வெளிநாடான கத்தாரில் உள்ள எல்.என்.ஜி கேஸ் ஆலை விபத்தில் சிக்கிப் பரிதாபமாக உயிரிழந்த திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த மூன்று இளம் தொழிலாளர்களின் குடும்பத்தினரை, ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ச. சதீஷ் கிறிஸ்டோபர் நேரில் சந்தித்து பெருத்த மனவேதனையையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்து ஆறுதல் கூறினார்.
இக்கொடூர விபத்தில் ராதாபுரம் தொகுதி சிதம்பராபுரம் பகுதியைச் சேர்ந்த பபித் (26), பணகுடி பகுதியைச் சேர்ந்த சுபின் மைக்கேல் (25) மற்றும் சுர்ஜித் (21) ஆகிய மூன்று தம்பிமார்கள் உயிரிழந்தனர். இவர்களின்



உடல்களைத் தாயகம் கொண்டு வரவும், பாதிக்கப்பட்ட ஏழைக் குடும்பங்களுக்குப் போர்க்கால நிவாரணம் வழங்கவும் சட்டமன்ற உறுப்பினர் எடுத்த தீர்க்கமான தரைமட்ட முயற்சிகளின் பலனாக, நேற்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தலா 10 லட்சம் ரூபாய் நிவாரண உதவி அறிவிக்கப்பட்டது. அதன்படி, முதலமைச்சர் அறிவித்த ரூ.10 லட்சத்திற்கான அரசு நிவாரணக் காசோலைகளை, உயிரிழந்த மூன்று இளைஞர்களின் குடும்பத்தினரிடமும் ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ச. சதீஷ் கிறிஸ்டோபர் நேரில் வழங்கினார். இந்நிகழ்வில் தமிழக வெற்றிக்கழக முக்கிய நிர்வாகிகள் மற்றும் பாமரப் பொதுமக்கள் பலர் உடனிருந்தனர்.

## தமிழ்நாட்டில் முதல் 3 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு வானிலை ஆய்வு மையம்

சென்னை, ஜூன்.25-
தமிழ்நாட்டில் இன்று முதல் 3 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கோவை, நீலகிரி, தேனி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் ஜூன் 27ம் தேதி கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல், தேனி, விருதுநகர், தென்காசி,



நெல்லை, கன்னியாகுமரி, திருவண்ணாமலை, வேலூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் ஜூன் 28ல் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது

## பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் அதிகரிப்பு கனிமொழி எம்.பி.

சென்னை, ஜூன்.25-
குழந்தைகள், பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் இதுவரை இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளத்துக்கு என கனிமொழி எம்.பி. கூறியுள்ளார். குற்றங்களை தடுக்காமல் அனைத்துக்கும் திமுக மீது பழிபோடுவதில் மட்டுமே தவெக அரசு குறியாக உள்ளது என கனிமொழி குற்றம் சாட்டியுள்ளார்

## மறைந்த ஈரான் உச்சத் தலைவர் கமேனியின் இறுதிச் சடங்கில் பங்கேற்க பிரதமர் மோடிக்கு அழைப்பு

புதுடெல்லி, ஜூன்.25-
மறைந்த ஈரான் உச்சத் தலைவர் அயதுல்லா அலி கமேனியின் இறுதிச் சடங்கில் பங்கேற்க பிரதமர் நரேந்திர மோடிக்கு ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியான் அழைப்பு விடுத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.
கடந்த பிப்ரவரி 28 அன்று, இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து நடத்திய ராணுவத் தாக்குதலில் ஈரான் உச்சத் தலைவர் அயதுல்லா அலி கமேனி உயிரிழந்தார். அவருடன் அவரது மகள், மருமகன், ஒரு பேரக்குழந்தை ஆகியோரும் உயிரிழந்தனர். இஸ்லாமிய சட்டங்களின்படி ஒருவர் இறந்த 24 மணி நேரத்துக்குள் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்றாலும், மேற்கு ஆசியாவில் நிலவிய போர்ச் சூழல்



காரணமாக கமேனியின் இறுதிச் சடங்கு பலமுறை ஒத்திவைக்கப்பட்டது.
இந்நிலையில், அயதுல்லா அலி கமேனியின் இறுதிச் சடங்குகள் தெஹ்ரான் மற்றும் கோம் ஆகிய நகரங்களில் வரும் ஜூலை 4, 5, 6, 7 ஆகிய தேதிகளில் நடைபெறும் என்று கூறப்படுகிறது. இறுதி நிகழ்வு ஜூலை 9ம் தேதி மஷாத் நகரில் நடைபெறும் என்று பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.அயதுல்லா அலி கமேனியின் இறுதிச் சடங்கில் பங்கேற்க பிரதமர் நரேந்திர மோடிக்கு ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியான் அழைப்பு விடுத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. எனினும், இந்த அழைப்பு தொடர்பாக பிரதமர் மோடி தரப்பில் இன்னும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இறுதிச் சடங்குகளில் பங்கேற்க சீனா, ரஷ்யா, கத்தார், பிரான்ஸ், பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் சார்பில், தங்கள் நாட்டின் தூதுக்குழு இறுதிச் சடங்கில் பங்கேற்கும் என்று பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## "பேரவையிலேயே பேசி இருக்கலாமே..." உதயநிதிக்கு அமைச்சர் செங்கோட்டையன் பதில்

கோவை, ஜூன்.25-
"சட்டப்பேரவைக்குள் இருந்து எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் கருத்து சொல்லியிருந்தால், அதற்கான பதில் கிடைத்திருக்கும்" என அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் விமர்சித்தார்.கோவை விமான நிலையத்தில் தமிழக வருவாய்த் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் இன்று செய்தியாளர்களிடம் கூறியது: தமிழக முதல்வர் விஜய் சொல்லும் ஒவ்வொரு வார்த்தைகளையும் முழுமையாக கேட்டுவிட்டு, எதிர்க்கட்சித் தலைவர்



உதயநிதி ஸ்டாலின் பேச வேண்டும். முதல்வர் சிந்தனை வேறு. தமிழகத்தில் நேர்மையான ஆட்சியைத் தர வேண்டும் என நினைக்கிறார். அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு தர வேண்டும் என்பதுதான் முதல்வரின் நோக்கம். சட்டப்பேரவையை விட்டு வெளியே போய் கருத்து சொல்லாமல், உள்ளே இருந்து முழுமையாக கேட்டுவிட்டு கருத்து சொல்லலாம். அதற்கான பதிலும் எதிர்க்கட்சித் தலைவருக்கு கிடைத்திருக்கும். திமுக கருத்துகளை ஏற்றுக்கொள்ளாத காரணத்தால்தான், மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளனர். குழந்தைகளில் இருந்து கல்லூரியில் படிப்பவர்கள் வரை அனைவரும், தமிழக வெற்றிக் கழகத்தின் வெற்றியில் பெரும் பங்கு உண்டு.முதல்வர் விஜய் பிறந்தநாளன்று பள்ளி மாணவர்கள் கட்சிக் கொடி ஏந்தியதற்கு நாங்கள் பொறுப்பல்ல. மறைந்த திமுக தலைவர் கருணாநிதி படத்திறப்பு விழாவுக்கு குடியரசுத் தலைவர் தமிழகத்துக்கு வந்தபோது 2 முறை தேசியகீதம் இசைக்கப்பட்டது. சட்டப் பேரவைக்குள் 2 முறை தேசியகீதம் இசைக்கப்பட்டதில் எந்த தவறும் இல்லை.
தமிழக வெற்றிக் கழகம் ஆட்சியமைக்க பாஜக ஆதரவை கேட்கவில்லை. என்றைக்கும் கேட்கவில்லை. பாஜகவின் நயினார் நாகேந்திரன் காமெடியாக பேசிக் கொண்டிருக்கிறார். நாங்கள் தவறு செய்யமாட்டோம், தவறு செய்யவிடமாட்டோம் என முதல்வர் சொல்லியுள்ளார். எனவே, கோடநாடு உள்ளிட்ட அனைத்து விவகாரங்களிலும் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அவர் தெரிவித்தார்.

# வருங்காலத்திலும் நாட்டை ஆளப் போவது பாஜகதான்: அடுத்த தேர்தல் வரை தவெக இருக்குமா என நயினார் கேள்வி

சென்னை, ஜூன்.25-
ஜன சங்கத்தின் நிறுவனர் டாக்டர் ஷ்யாமா பிரசாத் முகர்ஜியின் நினைவு நாளையொட்டி சென்னை தி.நகரில் உள்ள பாஜக மாநில தலைமை அலுவலகமான கமலாலயத்தில் அவரது படத்துக்கு மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் நேற்று மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.



அப்போது செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றுவதற்கு நீதிபதி உத்தரவிட்டும், தீபம் ஏற்றமுடியாது என அமைச்சர் நிர்மல்குமார் சொன்னால், சட்டப்படி, அவர் சட்டப்பேரவை உறுப்பினர் மட்டும் அல்ல; அமைச்சராக இருப்பதற்குக்கூட தகுதி இல்லாதவர்.

மோடி, அமித் ஷா ஆகியோர், அவர்களது உறவினர்களைக் கூட ஆளுநர்களாக நியமிக்கலாம் என அவர் கூறியிருக்கிறார். இதுபோன்று எங்கேயாவது நடந்திருந்தால் அவர் சொல்ல வேண்டும். தவெகவை போல 'ஏனோ தானோ' கட்சியோ, சாதாரண கட்சியோ அல்ல பாஜக.

இன்று மட்டும் அல்ல; இனி வருங்காலங்களில் எத்தனை தேர்தல் வந்தாலும் பாஜக தான் நாட்டை ஆளும். ஆனால், தவெக அடுத்த தேர்தல் வரை இருக்குமா? இல்லையா? என்பது தெரியாது.

இன்னமும் சினிமாவில் நடிப்பதை போலவே சட்டப்பேரவையில் நடித்து கொண்டிருக்கிறார் முதல்வர் விஜய். சட்டப்பேரவையில் அவ்வாறு சைகை காட்ட கூடாது என்பது அனைவருக்கும் தெரியும். இதுபோல முன்பு செய்தவர்களின் நிலை என்ன ஆனது என்பதும் உங்களுக்கு தெரியும். இவ்வாறு அவர் கூறினார்.

## தனியார் பள்ளி கல்வி கட்டண வழக்கு

# தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்தது சென்னை உயர்நீதிமன்றம்

சென்னை, ஜூன்.25-
தனியார் பள்ளிகள் கல்வி கட்டணத்தை பள்ளிகளின் அறிவிப்பு பலகைகளில் வெளியிட பிறப்பித்த உத்தரவை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் தேதி குறிப்பிடாமல் தீர்ப்பை சென்னை உயர்நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.




தமிழ்நாடு முழுவதும் உள்ள மெட்ரிகுலேஷன், சிபிஎஸ்இ என அனைத்து தனியார் பள்ளிகளுக்கும் அரசு நிர்ணயித்துள்ள கல்விக் கட்டண விவரங்களை, பள்ளிகளின் விளம்பர பலகைகளில் வெளியிடுவதையும், மாணவர் சேர்க்கைக்கான விண் ணப்பப் படிவத்திலும் அச்சிட்டு வெளியிடவதையும் கட்டாயமாக்கும்படி தனியார் பள்ளிகள் இயக்குநருக்கு தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம் மே 25 ஆம் தேதி உத்தரவிட்டது.தமிழ்நாடு அரசியல்அதன்படி, ஜூன் 5 ஆம் தேதிக்குள் கட்டண விவரங்களை விளம்பர பலகையில் வெளியிடும்படி, அனைத்து நர்சரி, பிரைமரி, மெட்ரிக், சிபிஎஸ்இ, பிற வாரிய பள்ளிகளுக்கு தனியார் பள்ளிகள் இயக்குநர் ஜூன் 1 ஆம் தேதி சுற்றறிக்கை அனுப்பினார். இதனைத் தொடர்ந்து, மாநில தகவல் ஆணைய உத்தரவையும், தனியார் பள்ளிகள் இயக்குநர் பிறப்பித்த சுற்றறிக்கையையும் ரத்து செய்யக் கோரி அகில இந்திய தனியார் கல்வி நிறுவனங்கள் சார்பில் அதன் பொதுச் செயலாளர் கே.பழனியப்பன் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி எம்.தண்டபாணி முன் இன்று விசாரணைக்கு வந்தது. மனுதாரர் தரப்பில், தகவல் உரிமைச் சட்டம், தனியார் கல்வி நிறுவனங்களுக்கு பொருந்தாது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதனையடுத்து சிபிஎஸ்இ போன்ற ஒன்றிய அரசின் பாடத் திட்டத்தின் கீழ் செயல்படும் பள்ளிகளை தமிழ்நாடு அரசு கட்டுப்படுத்த முடியாது என வாதிடப்பட்டது. தமிழ்நாடு அரசுத் தரப்பில், தகவல் ஆணைய உத்தரவின் அடிப்படையில் கல்வி கட்டணத்தை வெளியிட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.இந்த உத்தரவை எதிர்த்து தனிப்பட்ட பள்ளிகள் தான் வழக்கு தாக்கல் செய்ய முடியும். ஆனால், சங்கத்தின் சார்பில் வழக்கு தாக்கல் செய்ய முடியாது. விதிகளின்படி பள்ளிகள் கட்டண விவரங்களை வெளியிட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி தண்டபாணி, வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைத்தார்

# நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் சேமிப்பு கட்டமைப்பு கோரிய வழக்கில் அரசு பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு

மதுரை, ஜூன்.25-
அனைத்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலும் அறிவியல் அடிப்படையில் சேமிப்பு கட்டமைப்பு உருவாக்கக் கோரிய வழக்கில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக தலைவர் பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



தஞ்சையை சேர்ந்த அமிர்த ராஜ ஹமீதுதீன் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், "தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலும் அறிவியல் அடிப்படையில் சேமிப்பு கட்டமைப்பை உருவாக்குவதற்காக நிரந்தர சேமிப்பு கிடங்குகளை கட்ட உத்தரவிட வேண்டும்.

மேலும், கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை மழை, வெள்ளம் போன்றவற்றில் இருந்து பாதுகாக்கும் வகையில் சேமிப்பு, பராமரிப்பு, கையாளுதல், போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு தொடர்பான நிலையான வழிகாட்டுதல்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தவும், இது போன்ற சேதங்களால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகளுக்கு உரிய இழப்பீடு வழங்கும் வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதி ராமன் அமர்வு முன்பாக இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரரின் கோரிக்கையை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், "மனுதாரர் குறிப்பிட்டிருக்கும் இடம் மட்டுமல்ல, பல மாவட்டங்களில் இந்த பிரச்சினை உள்ளது. ஒரு நாள் மழையில், பல மாத உழைப்பு வீணாகிறது. பெரும் இழப்பு ஏற்படுகிறது. விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். மனு தொடர்பாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக தலைவர் பதில் மனுவை தாக்கல் செய்ய உத்தரவிட்டு விசாரணையை ஜூலை மாதத்துக்கு ஒத்திவைத்தனர்

# "சட்டப்பேரவையில் தனிப்பட்ட தாக்குதலில் ஈடுபடுவது ஏற்புடையதல்ல" மு.வீரபாண்டியன்

அருப்புக்கோட்டை, ஜூன்.25-
"சட்டப்பேரவையில் தனிப்பட்ட முறையிலான தாக்குதலில் ஈடுபடுவது ஜனநாயகத்துக்கு ஏற்புடையது அல்ல" என்று இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் வீரபாண்டியன் தெரிவித்தார்.விருதுநகர் மாவட்டம் திருச்சுழி அருகே உள்ள எம்.ரெட்டியபட்டியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கிளைச் செயலாளர்கள் கூட்டத்துக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் மு.வீரபாண்டியன் கூறியது:



"இந்தியாவில் இருக்கின்ற சட்டமன்றங்களிலே, பெரும் கீர்த்தியும், புகழும் வாய்ந்தது நமது தமிழக சட்டமன்றம்தான். மக்கள் அதிகாரத்தின், இறையாண்மையை வெளிப்படுத்துகின்ற இடம் அது. அதை கடந்த முறை ஆளுநர் அலட்சியப்படுத்தினார். அவருக்கு தமிழக மக்கள் நல்ல பாடங்களைப் புகட்டினர்.

சட்டப்பேரவையில் தனிப்பட்ட முறையிலான தாக்குதலில் ஈடுபடுவது ஜனநாயகத்துக்கு ஏற்புடையது அல்ல. சட்டப்பேரவையில் யாரையும் தாழ்த்திப் பேசக்கூடாது. உடல் மொழியால் விமர்சிக்கக் கூடாது. பண்பு தவறிய வார்த்தைகளைப் பயன்படுத்தக் கூடாது. உயர் பொறுப்பில் இருப்பவர்கள் கூடுதல் கவனமாக இருக்க வேண்டும்.

தந்தையைத் தேடுகிறேன் என முதல்வர் கூறியது ஏற்புடையது அல்ல. அதேபோல், அதற்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி, முதல்வரின் தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி பேசியதும் ஏற்புடையது அல்ல. மக்கள் பிரச்சினைகள் ஏராளமாக இருக்கின்றன. அதைப் பற்றி நாம் கூட்டாகச் சிந்திக்க வேண்டும் என்பதுதான் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாடு.

மத்திய அரசுடன் நிர்வாக அளவில் நாங்கள் முரண்படமாட்டோம் என்று தமிழக முதல்வர் சொல்லியிருப்பதை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. மத்திய அரசுடன் நிர்வாக அளவில் முரண்படக் கூடாது என்பதுதான் எங்கள் நிலை. அதேநேரத்தில், மாநிலங்களை மத்திய அரசு ஒரு வேலையாள் போல், பணியாள்போல் கருதக் கூடாது. கடந்த முறை மாநில உரிமைகளை மத்திய அரசு மீறியது. எனவே, மத்திய அரசுக்கு எதிராக போராட வேண்டிய நிலை ஏற்பட்டது. நிதியை அது முடக்கியது. நமது நலத்திட்டங்களுக்கு உரிய நிதிகளை வழங்க மறுத்தது.இந்த அரசும் மாநில உரிமைகளுக்காக போராட வேண்டும். நமது உரிமைகளை விட்டுக் கொடுக்கக் கூடாது. பிரதமருடனும், மத்திய அரசுடனும், நிர்வாகத்துடனமும் முரண்பாடு இல்லாமல், இணைந்து செயல்படுவது யாருக்கும், எந்த வேறுபட்ட கருத்துக்ளுக்கும் இடம் கொடுக்காது. அதேவேளையில், ஒருபோதும் மாநிலங்களின் உரிமையை விட்டுக் கொடுக்கக் கூடாது. எப்பொழுதுமே மதச்சார்பின்மையை முதல்வர் விஜய் பின்பற்ற வேண்டும். பின்பற்றுவார் என்று நாங்களும் நம்புகிறோம்.நாடு கடந்து, புலம்பெயர்ந்து பல லட்சக்கணக்கான ஏழை, எளிய தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் வேலை பார்க்கிறார்கள். அவர்களுக்கு உரிய ஊதியம் கிடைப்பதில்லை. மருத்துவம், கல்வி, வாழ்விடம், பணியிடம் குறித்த ஓர் ஆய்வை முதல்வர் குழு அமைத்து ஆய்வு செய்ய வேண்டும். நாங்கள் திமுகவோடு மட்டுமல்ல, அதிமுகவோடும் பயணித்திருக்கிறோம். ஜனநாயக சக்திகள் அனைத்தோடும் இனியும் நாங்கள் பயணிப்போம்.

வெள்ளை அறிக்கை பற்றி, நிர்வாகத்தை பற்றி எங்களுக்கு என்ன தெரியும்? நாங்கள் வெளியில் இருக்கிறோம். நாங்கள் அதிகாரத்துக்கு வருகிறபோது அதைப்பற்றி தெரிந்துகொள்வோம்.

மத்திய அரசு பெற்றுள்ள கடனோடு ஒப்பிட்டால் மாநில அரசு கடன்கள் மிக மிக குறைவு. அதிர்ச்சி தருகிற வகையில் நாட்டின் பிரதமரே கடன் பெற்றிருக்கிறார். இந்தியாவே கடன் பெற்றிருக்கிறது. உலக வங்கி சொல்லுகிறபடி நாம் நடக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

கடன் இல்லாத ஒரு தற்சார்பு சூழலை நோக்கி இந்தியா, தமிழ்நாடு முன்னேற வேண்டும் என்பதுதான் எங்கள் நிலை. இந்தக் கடனை தமிழ்நாடு தனது உற்பத்தி திறனைக் கொண்டுதான் அடைக்க வேண்டும். அதில் தற்சார்புதான் மிகப் பெரிய பங்களிப்பு. கடன் சுமையிலிருந்து நாடு விடுபட வேண்டும் என்றால், வாராக் கடன்கள் வசூலிக்கப்பட வேண்டும். இதில், மாநில அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

ஆரம்பக் கல்வி துவங்கி, உயர் கல்வி வரை, அரசு கல்வி நிறுவனங்கள் இன்னும் கூடுதல் கவனம் பெற வேண்டும். அது மிகச் சிறந்த நிலையை எய்த வேண்டும் என்பதுதான் எங்கள் நிலை. அதற்கான முழு ஒத்துழைப்பை கம்யூனிஸ்ட் கட்சி தரும்" என்று அவர் கூறினார்.

# சென்னை, திருச்சி உள்ளிட்ட 5 மாவட்டங்களில் சாலையோர உணவு விற்பனையை முறைப்படுத்த முடிவு: அமைச்சர் அருண்ராஜ்

சென்னை, ஜூன்.25-
சென்னை, திருச்சி உள்ளிட்ட 5 மாவட்டங்களில் சாலையோர உணவு விற்பனையை முறைப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என அமைச்சர் அருண் ராஜ் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "அசைவ உணவு விடுதிகள், மக்கள் அதிகம் கூடும் இடங்களில் பாதுகாப்பான முறையில் உணவு தயாரிப்பதை உறுதி செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. சென்னை, திருச்சி, சேலம், கோவை, திருப்பூரில் 'ஆரோக்கியமான சுகாதாரமான உணவு' திட்டம் அமலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த 5 மாவட்டங்களில் சாலையோர உணவு விற்பனையை முறைப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. தெருவோர உணவுக் கடை வைத்திருப்போர் தரமான சுகாதாரமான உணவு தர வேண்டும் என்பதற்காக புதிய விஷயங்கள் முன்னெக்கப்பட்டுள்ளது. உணவகப் பணியாளர்களுக்கு டைபாய்டு தடுப்பூசி போட நடவடிக்கை எடுக்கப்படும். குழந்தைகளுக்கான தங்க மோதிரம் திட்டம் மூலம் அரசு மருத்துவமனைகளில் பிரசவம் அதிகரிக்கும்," என அமைச்சர் அருண் ராஜ் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் விபத்து குறித்துப் பேசிய அவர், "அம்மோனியா கசிவு தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வாயுக் கசிவால் இறந்தோரின் உடல்கள் அரசு செலவில் சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது." என்றார். மருத்துவமனைகளில் பணியாற்றும் பணியாளர்கள், பணம் வாங்குவதாக புகார் கூறப்படுகிறது. பொதுமக்களுக்கு இவ்வாறு இடையூறு ஏற்பட்டால், இது குறித்து 104 என்ற எண்ணுக்கு புகாரளிக்கலாம். அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




# மனைவியை கொலை செய்வேன் என வானத்தை நோக்கி சுட்டு மிரட்டிய ராணுவ வீரர்

சென்னை, ஜூன்.25-
மனைவியை கொலை செய்து விடுவேன் எனக் கூறி, துப்பாக்கியால் வானத்தை நோக்கி சுட்டு மிரட்டிய, ஓய்வு பெற்ற ராணுவ வீரரிடம் போலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

அம்பத்தூர் அருகே உள்ள அயப்பாக்கம் கணேஷ் நகர் 4வது தெருவை சேர்ந்தவர் ஜான்பாஸ்கா (59). இந்திய ராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற இவர், தனது மனைவி அனுராதாவுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக, கடந்த 4 ஆண்டுகளாக தனியாக வசித்துவருவதாக கூறப்படுகிறது.

அனுராதா தனது குழந்தைகளுடன் அரும்பாக்கம் என்.எஸ்.கே. நகரில் வசித்து வருகிறார். இந்நிலையில், ஜான்பாஸ்கா நேற்று முன்தினம் இரவு மனைவியின் வீட்டுக்கு சென்றுள்ளார்.

அப்போது, அங்கிருந்த தனது மகள் கரீனாவிடம், தன்னிடம் இருந்த துப்பாக்கியை காட்டி, அனுராதாவை கொலை செய்துவிட்டு, தானும் தற்கொலை செய்து கொள்வேன் என மிரட்டியதாக கூறப்படுகிறது. மேலும், அங்கிருந்தபடியே வானத்தை நோக்கி ஒரு முறை சுட்டுவிட்டு சென்றதாக தெரிகிறது.

இதனால், அதிர்ச்சியடைந்த கரீனா, தனது தாயிடம் தகவல் தெரிவித்தார். இதையடுத்து அனுராதா அமைந்தகரை காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

புகாரின் பேரில் நடவடிக்கை எடுத்த போலீஸார், ஜான்பாஸ்காவை பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும், அவரிடம் இருந்த ஏர்கன் வகை துப்பாக்கி மற்றும் 180 டம்மி தோட்டாக்களை பறிமுதல் செய்தனர். சம்பவம் குறித்து தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

# திருச்செந்தூர் முருகன் கோயிலில் கட்டண உயர்வு இல்லை அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ்

தூத்துக்குடி, ஜூன் .25-
திருச்செந்தூர் முருகன் கோயிலில் கட்டண உயர்வு எதுவும் இல்லை என அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் பேட்டியளித்துள்ளார். திருச்செந்தூர் கோயிலில் நிலவி வந்த முறைகேடு குறித்து மட்டுமே நடவடிக்கை எடுத்தோம். மக்கள் விருப்பத்திற்கு மாறாக அரசு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காது என அமைச்சர் ரமேஷ் தெரிவித்துள்ளார்

# சட்டப்பேரவையில் முதல்வர் பேச்சுக்கு எதிர்ப்பு: உதயநிதி உள்ளிட்ட திமுக எம்எல்ஏக்கள் வெளிநடப்பு

சென்னை, ஜூன்.25-
சட்டப்பேரவையில் நிறைவு நாளான நேற்று, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது எதிர்க்கட்சிகள் பேசியதற்கு முதல்வர் விஜய் பதிலளித்தார். அப்போது, 'கட்சிநிதி' என்ற பெயரில் அடித்த கொள்ளையெல்லாம் ஒவ்வொன்றாக இப்போது அரசின் கஜானாவுக்கு கொண்டு சேர்த்து வருவதாக முதல்வர் குறிப்பிட்டார்.



இதற்கு திமுக உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேச வாய்ப்பு கேட்டார். அதற்கு பேரவைத் தலைவர் அனுமதி மறுத்ததால் திமுக உறுப்பினர்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர்.

பதிலுக்கு தவெக உறுப்பினர்களும் எழுந்து கூச்சலிட்டனர். அதைத் தொடர்ந்து நடைபெற்ற விவாதம்: பேரவைத் தலைவர் ஜேசிடி பிரபாகர்: முதலில் முதல்வர் பேசி முடிக்கட்டும். நீங்கள் கூறியபடி அதில் ஆதாரமற்றவை இருந்தால்ஆய்வுசெய்து உரிய நடவடிக்கை எடுப்பேன்.

அவர் பேசி முடித்ததும் எதிர்க்கட்சி தலைவர்பேசுவதற்கு வாய்ப்பு தருவேன். எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி: நேற்று நான் பேசும்போது, சில அமைச்சர்கள் குறுக்கிட்டுப் பேசினார்கள். அதற்கு அனுமதி கொடுத்தீர்கள். இன்று முதல்வர் பேசும்போது சில தவறான வார்த்தைகளைக் கூறுகிறார்.

கட்சி நிதி என்று சொல்லியுள்ளார். அதேநேரம், எந்த கட்சி என சொல்லவில்லை என்கிறார் அமைச்சர். தைரியம் இருந்தால் சொல்லுங்கள். நாங்கள் எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறோம். எதையும் ஆதாரத்தோடு பேசுங்கள். நான் நேற்று பேசி முடித்த பிறகு, அவை முடிந்துவிட்டதாக சொன்னீர்கள். நாங்கள் வீட்டுக்குச் சென்று டி.வி.யைப் போட்டு பார்த்தால் ஒரு அமைச்சர் இன்னும் பதில் சொல்லிக் கொண்டே இருந்திருக்கிறார். இது என்ன மரபு? முதல்வர் பேசும்போது நாங்கள் அமைதியாக கேட்டுக் கொண்டுதான் இருந்தோம். ஆனால், அவர் சில கருத்துகளை பேசும்போது அதை அனுமதிக்க முடியாது.

பேரவைத் தலைவர்: முதல்வரின் குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லையெனில் ஆய்வு செய்து நீக்கப்படும். இவ்வாறு வாக்குவாதம் நடைபெற்றது. இதையடுத்து முதல்வர் விஜய் பேசத் தொடங்கியதும், அவர் உரைக்கு எதிர்ப்பு தெரிவித்து உதயநிதி தலைமையில் திமுக உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்பு செய்தனர்.



## சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ராஜீவ், முதல்வர் விஜய் பிறந்தநாளில் முதியோர்களுக்கு வேட்டிசேலை விநியோகம்!

புளியங்குடி, ஜூன்.25- தமிழக வெற்றிக்கழகத்தின் தலைவரும், முதலமைச்சருமான ஜோசப் விஜய் அவர்களின் 52வது பிறந்தநாளை முன்னிட்டு, தென்காசி வடக்கு மாவட்ட தவெக சார்பில் புளியங்குடி சிந்தாமணி பொன்னம்மாள் முதியோர் இல்லத்தில் நெகிழ்ச்சியான நலத்திட்ட விழா நடைபெற்றது. இந்நிகழ்வில், சுற்றுச்சூழல் மேம்பாடு மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் ராஜீவ் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, இல்லத்தில் உள்ள ஆதரவற்ற முதியோர்கள் அனைவருக்கும் இலவச வேட்டி, சேலைகள் மற்றும் புத்தாடைகளைத் தனது சொந்தக் கரங்களால் அள்ளி வழங்கிச் சிறப்பித்தார்.

தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் மாரியப்பன், அறக்கட்டளைத் தலைவர் சகாதேவன் மற்றும் சுமதி ஆகியோர் நிகழ்வை நேர்த்தியாக ஒருங்கிணைத்தனர். இதில் மாவட்ட இளைஞரணி சௌந்திரபாண்டியன், சுரேஷ், நகரச் செயலாளர்கள் எஸ்.வி.எம். கண்ணன், வெங்கடேஷ், மீனவரணி ஜான்சன் துரை, செயற்குழு உறுப்பினர் கிறிஸ்டோபர் ராஜா, வர்கீஸ், மொபைல் ஆல்பர்ட் உள்ளிட்ட மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் தவெக தம்பிகள் பெருந்திரளாகப் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

## “தூய்மைப் பணிகளைத் தனியார்மயமாக்கக் கூடாது!” சாமானியர்களின் பக்கம் நின்ற திருமுருகன்பூண்டி நகராட்சி உறுப்பினர்கள்!

திருப்பூர், ஜூன்.25

திருப்பூர் மாவட்டம் திருமுருகன்பூண்டி நகராட்சியின் மன்றக் கூட்டம், நகராட்சி வளாகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நகராட்சிப் பகுதிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களின் நலன் மற்றும் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பு செய்யும் நோக்கில், அவர்களின் பணிகளை எக்காரணம் கொண்டும் தனியார் மயமாக்கக் கூடாது என்ற உன்னதத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.



**கார்ப்பரேட் மயமாக்கலுக்கு விழுந்த பலத்த அடி:**

நகராட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்ற இம்மாமன்றக் கூட்டத்தில், நகராட்சிப் பகுதிகளில் தூய்மைப் பணிகளைத் தனியார் ஒப்பந்த நிறுவனங்களிடம் ஒப்படைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து விவாதங்கள் எழுந்தன. அதற்கு மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

தூய்மைப் பணிகளைத் தனியார்மயமாக்கினால், பல ஆண்டுகளாகக் குறைந்த ஊதியத்தில் உழைத்து வரும் சாமானியத் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பும், அவர்களின் அத்தியாவசிய வாழ்வாதாரமும் அடியோடு பறிபோகும் என்று அறிவியல் பூர்வமாக எடுத்துரைக்கப்பட்டது.

**ஒருமனதாக நிறைவேறிய தீர்மானம்:**

இதனைத் தொடர்ந்து, திருமுருகன்பூண்டி நகராட்சியில் பணிபுரியும் தரைமட்டத் தூய்மைப் பணியாளர்களை எக்காரணம் கொண்டும் தனியார் நிறுவனங்களின் வசம் ஒப்படைக்கக் கூடாது என்றும், அவர்களின் பணிப் பாதுகாப்பை நகராட்சி நிர்வாகமே நேரடியாக உறுதி செய்ய வேண்டும் என்றும் கறாரான தீர்மானம் கொண்டு வரப்பட்டு, அனைத்து உறுப்பினர்களின் ஆதரவோடு தங்குதடையின்றி ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானம் திருமுருகன்பூண்டி நகராட்சி தூய்மைப் பணியாளர்கள் மற்றும் சாமானிய உழைப்பாளர்கள் மத்தியில் ஆகப்பெரும் நிம்மதியையும், நெகிழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.



## நீதி கிடைக்கும் வரை பின்வாங்க மாட்டோம்! பனமரத்துப்பட்டியில் அதிகாரிகளின் எதிர்ப்பை மீறி உழவுப் பணிகள் தீவிரம்!

சேலம், ஜூன்.25- சேலம் மாவட்டம் பனமரத்துப்பட்டி அடுத்த குரால்நத்தம் பகுதியில் அமைந்துள்ள அத்திப்பட்டி மற்றும் சூரியூர் நில விவகாரத்தில், தங்களுக்குச் சொந்தமான நிலங்களை மீட்கக் கோரி கடந்த 22 ஆண்டுகளுக்கும் மேலாகப் போராடி வரும் 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள், திடீரென தங்களது விவசாய நிலங்களுக்குள் அதிரடியாக நுழைந்து உழவுப் பணிகளைத் தொடங்கியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தேர்தல் நேரங்களில் திமுக மற்றும் அதிமுக ஆகிய இரு கட்சிகளுமே வாக்கு வங்கி அரசியலுக்காகப் பொய் வாக்குறுதி அளித்து தங்களை ஏமாற்றி விட்டதாகப் பொதுமக்கள் கறாராகக் குற்றம் சாட்டுகின்றனர். கடந்த ஆண்டு ஆடி மாதத்தில் குலதெய்வ வழிபாட்டிற்குச் சென்ற கிராம மக்கள் மீது வழக்குத் தொடரப்பட்ட சூழலில், தற்போது அந்த நிலப் பகுதியிலிருந்த ஆயிரக்கணக்கான மரங்கள் சட்டவிரோதமாக வெட்டப்பட்டுக் கடத்தப்பட்டிருப்பதாக மக்கள் வேதனை தெரிவிக்கின்றனர். மரக்கடத்தல் லாரிகளைப் பொதுமக்கள் பிடித்துக் கொடுத்தும் அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனப் புகார் எழுந்துள்ளது.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த அரசு அதிகாரிகளுடன், அவர்களின் அலட்சியப் போக்கைக் கண்டித்துப் பொதுமக்கள் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அதிகாரிகளின் எதிர்ப்பையும் மீறி மக்கள் விவசாயப் பணிகளைத் தீவிரமாகத் தொடங்கியுள்ளதால், பனமரத்துப்பட்டி மற்றும் குரால்நத்தம் பகுதிகளில் தொடர்ந்து பலத்த பதற்றம் நிலவி வருகிறது.

## பெரும் அசம்பாவிதம் நடக்கும் முன் அதிகாரிகள் தூக்கம் கலைப்பார்களா? பனையபுரத்தில் நிலவும் அசாத்தியப் பதற்றம்!

விக்கிரவாண்டி, ஜூன்.25- விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சுங்கச்சாவடி அருகே தற்போது நடைபெற்று வரும் பாலம் கட்டுமான வேலைகளின் காரணமாக, பனையபுரத்திலிருந்து விக்கிரவாண்டி நோக்கி வரும் அனைத்து வாகனங்களும் ஆபத்தான முறையில் எதிர் திசையில் இயக்கப்பட்டு வருவதால், அப்பகுதியில் ஆகப்பெரும் விபத்து அபாயம் அப்பட்டமாக நிலவி வருகிறது.பாலம் வேலைக்காகச் சாலைகள் சரிவர மறிக்கப்படாததால், அதிவேகமாக வரும் கனரக மற்றும் சொகுசு வாகனங்கள் சுங்கச்சாவடிச் சாலைகளை எவ்வித விதிமுறைகளுமின்றி அசாத்திய முறையில் கடந்து செல்கின்றன. இதனால் எந்த நேரத்திலும் ஒரு கொடூரமான உயிர்ச் சேத விபத்து அல்லது பெரும் அசம்பாவிதம் நேரலாம் என வாகன ஓட்டிகளும், பாமரப் பொதுமக்களும் தரைமட்ட அளவில் அச்சம் தெரிவித்துள்ளனர்.




இப்பகுதியில் பெரும் விபத்துக்கள் ஏதும் சம்பவிக்கும் முன், விக்கிரவாண்டி போக்குவரத்து காவல்துறையினரும், சுங்கச்சாவடி உயர்மட்ட அதிகாரிகளும் போர்க்கால அடிப்படையில் களம் இறங்கி, தகுந்த மாற்றுப்பாதை உத்திகளையும், பாதுகாப்பு எச்சரிக்கைப் பலகைகளையும் அமைத்துச் போக்குவரத்தைச் சீரமைக்க வேண்டும் எனப் பொதுமக்கள் கறாராகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.



## “இனி நல்லதே நடக்கும்” ராமதாஸை சந்தித்த பின் அன்புமணி நெகிழ்ச்சி

விழுப்புரம், ஜூன்.25-

பாமக நிறுவனர் ராமதாஸை, அக்கட்சியின் தலைவர் அன்புமணி இன்று நேரில் சந்தித்தார். ராமதாஸ் மற்றும் அன்புமணி இடையே கடந்த சில மாதங்களாக கடும் மோதல் போக்கு இருந்த நிலையில், இருவரும் சந்தித்துப் பேசியுள்ளது அரசியல் அரங்கில் ஆச்சர்யத்தை உருவாக்கியுள்ளது.பாமக நிறுவனர் ராமதாஸ் சரஸ்வதி தம்பதியினரின் 61வது திருமண நாளை முன்னிட்டு, இவர்களின் மகனும், பாமக தலைவருமான அன்புமணி தனது குடும்பத்தினருடன், அவர்களை இன்று நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.தைலாபுரத்தில் உள்ள இல்லத்துக்கு வருகை தந்த அன்புமணியை, ராமதாஸ் கண்ணீர் மல்க வரவேற்று கட்டியணைத்தார். இதன் பின்னர் அன்புமணி, தனது பெற்றோர்களிடம் ஆசிபெற்றார். இதனைத் தொடந்து செய்தியாளர்களிடம் பேசிய அன்புமணி, “ இன்று அப்பா அம்மாவின் திருமண நாளில், குடும்பத்துடன் சென்று அவர்களின் வாழ்த்துகளையும், ஆசிர்வாதங்களையும் பெற்றுக்கொண்டோம். இனி நல்லதே நடக்கும்” என்றார்.2024ம் ஆண்டு டிசம்பரில் நடந்த பாமக பொதுக்குழுவில் அன்புமணி மற்றும் ராமதாஸ் இடையே வெளிப்படையான மோதல் வெடித்தது. இதன்பின்னர் இருவருக்கும் இடையிலான மோதல்போக்கு அதிகரித்து, இருவரும் எதிரெதிர் முகாம்களில் இருந்தவர்களை நீக்கிக்கொண்டனர். மேலும், 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் அன்புமணி தலைமையிலான பாமக அதிமுக அணியில் இடம்பெற்று 4 தொகுதிகளில் வென்றது. சசிகலாவுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்ட ராமதாஸ் தரப்பு தேர்தலில் எந்த தாக்கத்தையும் உருவாக்கவில்லை.கடந்த ஒன்றரை ஆண்டுகளாக அன்புமணி மற்றும் ராமதாஸ் இடையே மோதல் போக்கு நிலவிய நிலையில், இருவரும் மீண்டும் சந்தித்துள்ளனர். இதனால் பாமக மீண்டும் ஒன்றிணைய வாய்ப்புள்ளதாக அக்கட்சியின் தொண்டர்கள் நம்புகின்றனர்.



■ வில்லியனூரில் புதிதாக தொடங்கப்பட்டுள்ள கிட்ஸி பள்ளியின் திறப்பு விழாவில், அமைச்சர் ஆ. நமச்சிவாயம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி பள்ளியை திறந்து வைத்து தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் வில்லியனூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ரவிக்குமார் உடனிருந்தார்.



■ ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற முன்னாள் படைவீரர் சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் முன்னாள் படைவீரர் அவர்தம் வாரிசுதாரர்களுக்கு கல்வி உதவித்தொகையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.கந்தசாமி இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.



## எம்எல்ஏ அன்னை விஜி சரவணன் ஆலோசனையின்படி, நோட்டுப் புத்தகம் முதல் பென்சில் பாக்ஸ் வரை நற்பணி!

சாத்தான்குளம், ஜூன்.25- தமிழக வெற்றிக்கழகத்தின் தலைவரும், தமிழக முதலமைச்சருமான ஜோசப் விஜய் அவர்களின் 52வது பிறந்தநாளை முன்னிட்டு, தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் அருகே உள்ள நல்லூர் பள்ளியில் மாணவர்களுக்குக் கல்வி உபகரணங்கள் மற்றும் இனிப்புகள் வழங்கும் மக்கள் நல விழா நடைபெற்றது.

ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அன்னை விஜி சரவணன் அவர்களின் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனையின்படி இந்நிகழ்ச்சி ஒருங்கிணைக்கப்பட்டது. சாத்தான்குளம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் அற்புதராஜ் முன்னிலை வகிக்க, நல்லூர் கிளைச் செயலாளர் ஜெகன் இம்மாபெரும் கல்வி நற்பணி விழாவிற்குத் தலைமை தாங்கினார்.

விழாவையொட்டி, நல்லூர் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களின் கல்வி மேம்பாட்டிற்காக நோட்டுப் புத்தகங்கள், ஸ்கேல், பென்சில் பாக்ஸ் உள்ளிட்ட அத்தியாவசியக் கல்வி உபகரணங்களும், பிறந்தநாள் இனிப்புகளும் தங்குதடையின்றி அள்ளி வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் தமிழக வெற்றிக்கழகத்தின் முக்கிய நிர்வாகிகள், சார்பு அணிப் பொறுப்பாளர்கள் மற்றும் தொண்டர்கள் பெருந்திரளாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## நடிகர் ரவி மோகன் வீட்டில் நகை திருட்டு: பணிப்பெண்களை சிறை வைத்ததாக புகார்

சென்னை, ஜூன்.25- நகை திருட்டு தொடர்பாக, நடிகர் ரவி மோகன் வீட்டில் பணிப்பெண்கள் சிறை வைக்கப்பட்டதாக புகார் எழுந்துள்ளது. சென்னை நீலாங்கரையில் நடிகர் ரவி மோகன் வீடு உள்ளது. அங்கு சிலர் பணியாற்றி வருகின்றனர்.



இந்நிலையில் காவல் கட்டுப்பாட்டு அறைக்கு ஒருவர் தொடர்பு கொண்டு, நடிகர் ரவி மோகன் வீட்டுக்கு வேலைக்குச் சென்ற தனது தாய், மகன் வீடு திரும்பவில்லை என்றும், அவர்களை தொடர்பு கொள்ள முடியவில்லை என்றும் புகார் அளித்ததாக தெரிகிறது.

இதையடுத்து நீலாங்கரை போலீஸார் உடனடியாக அங்கு சென்று விசாரணை மேற்கொண்டனர். அப்போது வீட்டுக்குள் 2 பணிப்பெண்கள் மற்றும் அவர்களுடன் வந்திருந்த சிறுவன் ஒருவன் இருந்தது தெரியவந்தது.

இதுகுறித்து போலீஸார் நடிகர் ரவி மோகனிடம் விசாரித்த போது, வீட்டில் பணியாற்றி வந்த பெண்கள் நகை திருடியதாக சந்தேகம் ஏற்பட்டதால், அது தொடர்பாக அவர்களிடம் விசாரித்து வந்ததாக அவரது தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. புகார் தந்தால் நடவடிக்கை அப்போது போலீஸார், பொதுமக்கள் யாராக இருந்தாலும் தாங்களாகவே விசாரணை நடத்தி ஒருவரை வீட்டில் தடுத்து வைக்கக்கூடாது என்றும், ஏதேனும் புகார் இருந்தால் காவல் நிலையத்தில் தெரிவிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினர்.

மேலும் நகை திருட்டு தொடர்பாக உரிய புகார் அளித்தால் சட்டப்படி விசாரணை நடத்தப்படும் என தெரிவித்த போலீஸார் வீட்டிலிருந்த பணிப்பெண்கள், அவர்களுடன் இருந்த சிறுவனை அனுப்பி வைத்ததாக கூறப்படுகிறது. இந்த சம்பவம் தொடர்பாக நீலாங்கரை போலீஸார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## முதல்வர் பதிலுரையில் எந்த பதிலும் இல்லை அதிமுக எம்.பி. தனபால்

சென்னை, ஜூன்.25-

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதத்துக்கு முதல்வர் அளித்த பதிலுரையில் எந்த பதிலும் இல்லை என்று தனபால் எம்.பி. கூறியுள்ளார். சட்டமன்ற உறுப்பினர்களின் கேள்விகளுக்கோ, தவெக வாக்குறுதிகளுக்கோ எந்த பதிலும் இல்லாதது ஏமாற்றம் . முதலமைச்சர் விஜயின் பதிலுரையில் கதை, வசனம் நன்றாகவே இருந்தது, எழுதிக் கொடுத்தவருக்கு பாராட்டுகள் என தனபால் எம்.பி. விமர்சித்துள்ளார்






SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000